ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1919/42 - 2015 ජුනි මස 17 වැනි බදාදා - 2015.06.17
*1919/42 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபைக்கு கதிர்காமம் சாக்கடை திட்டத்தின் கீழ் 07 ஆம் இலக்க, பொம்பு நிலையம் நிர்மாணித்தல் பொருட்டு காணித்துண்டொன்றை கைப்பற்றிக் கொள்வதற்கு தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 04.
5/2/2/1098

**அட்டவணை**

மொனராகலை மாவட்டத்தில், கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவில், 146B ஆம் இலக்க, தெட்டகமுவை கிராம அலுவலர் பிரிவில் கதிர்காமம் கிராமத்தில் அமைந்துள்ள வெவ பஹலஹேன எனும் காணியை காட்டப்படுகின்ற மொனராகலை மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள MO/KTR/2014/39 F ஆம் இலக்க வரைவில் துண்டு எழுத்து A இல் காட்டப்படுகின்ற மொத்த அளவில் இருந்து சுமார் 0.0153 ஹெக்டெயார் (06 பேர்ச்சஸ்) ஆகின்ற பின்வரும் எல்லைகளினுள் இருக்கும் காணித்துண்டு:-

வடக்கு : இ.பு.வ.25 வரைவில் துண்டு இல. 1 R காணி ;
கிழக்கு : இ.பு.வ.25 வரைவில் துண்டு இல. 1 R காணி ;
தெற்கு : இ.பு.வ.25 வரைவில் துண்டு இல. 1 R காணி ;
மேற்கு : இ.பு.வ.25 வரைவில் துண்டு இல. 1 R காணி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: 01. பௌத்த அலுவல்கள் ஆணையாளர்,
பௌத்த அலுவல்கள் ஆணையாளர் திணைக்களம்,
கொழும்பு 07,
02. கௌரவ பஸ்நாயக்க நிலமே,
ருகுணு மகா கதிர்காமம் கோயில்,
கதிர்காமம்.

7- 122

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையின் குருதலாவை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் நீர்த்தாங்கி மற்றும் அலுவலக பொறுப்பதிகாரி இல்லம் நிர்மாணித்தல் பொருட்டு காணிப் பிரிவொன்றை கொள்வதற்கு தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 04.
5/2/1/1111

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில், வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 166A, குருதலாவ கிராம அலுவலர் பிரிவின் கோனகலபத்தன குருதலாவ கிராமத்தில் அமைந்துள்ள கோனகலபத்தன எனும் காணியில் தோற்றப்படும் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் திரு. விமல் இராஜரத்ன அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2617 ஆம் இலக்க வரைவின் துண்டு இலக்கம் B என தோற்றப்படும் சுமார் 12.5 பேர்ச்சஸ் மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

வடக்கு : இ. கி. தி. 189 என்ற துண்டு இல. 228 இன் பாகம் (வீதி ஒதுக்கீட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது) ;
கிழக்கு : துண்டு இல. C ;
தெற்கு : எம். எம். குணசேன அவர்கள் மற்றும் எம். எல். எம். ஜயதிலக அவர்கள் உரிமம் கோரும் FVP 189 துண்டு இல. 228 இன் பாகம்;
மேற்கு : எம். எம். குணசேன அவர்கள் உரிமை கோரும் FVP 189 துண்டு இல. 228 இன் பாகம் மற்றும் துண்டு இல. A.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: எஸ். பதுர்தீன் அவர்கள்,
6 ஆம் கம்பம்,
குருதலாவ.

7- 123

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச்சபையின் மொனராகலை- புத்தல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் கும்புக்கனை உள்ளிளுப்பு ஒன்றை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 03.
5/2/2 /1116

**அட்டவணை**

மொனராகலை மாவட்டத்தில், புத்தல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 145B, காமினிபுர கிராம அலுவலர் பிரிவின் ஒக்கம்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அலமானயாய அல்லாதவிடத்து குமாரவத்தை பாரவில எனும் காணியை காட்டப்படுகின்ற அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் திரு. பீ. பேரின்பநாதன் அவர்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட துண்டு இல. 1235 என காட்டப்படும் மொத்த அளவில் இருந்து சுமார் 0.0930 பேர்ச்சஸ் மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

துண்டு இல. 01 விஸ்தீரணம் : 0.0508 ஹெக்டெயார்.

வடக்கு : துண்டு இல. 3 இணையுடைய காணி ;
கிழக்கு : துண்டு இல. 2 இணையுடைய காணி ;
தெற்கு : ஈ. ஏ. அனுலாவதீ உரிமைகோரும் காணி ;
மேற்கு : கும்புக்கன் ஓயா.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திருமதி ஈ. ஏ. அனுலாவதீ,
2 ஆம் கம்பம், ஒக்கம்பிட்டிய.

துண்டு இல. 02 விஸ்தீரணம் : 0.0422 ஹெக்டெயார்.

வடக்கு : துண்டு இல. 3 இணையுடைய காணி ;
கிழக்கு : துண்டு இல. 2 இணையுடைய காணி ;
தெற்கு : ஈ. ஏ. அனுலாவதீ உரிமை கோரும் காணி ;
மேற்கு : துண்டு இல. 3 இணையுடைய காணி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திருமதி ஈ. ஏ. அனுலாவதீ,
2 ஆம் கம்பம், ஒக்கம்பிட்டிய.

7- 124

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் கந்தர நீர் வழங்கல் செயற்றிட்டத்தை மேம்படுத்தற்பொருட்டு நீர்த்தாங்கி மற்றும் சேவை நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, யூன் 04.
5/2/2/1119

## அட்டவணை

மாத்தறை மாவட்டத்தில் தெவிநுவர மாவட்ட செயலாளர் பிரிவின், இலக்கம் 438A., தலல்ல மத்திய கிராம அலுவலர் பிரிவில், தலல்ல கிராமத்திலமைந்த, முஹந்திரம்வத்தை அல்லாதவிடத்து கெடகேல்லகஹவத்தை எனும் காணியில், சுமார் 7 பேர்ச்சஸ் முழு அளவிலான கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.

வடக்கு : இந்த காணியின் மிகுதித்துண்டு ;
கிழக்கு : இந்த காணியின மிகுதித்துண்டு ;
தெற்கு : மார / DVN /96/441 திட்டத்தின் துண்டு இல. 1 ;
மேற்கு : மார / DVN /96/441 திட்டத்தின் நுழைவழித் துண்டு.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: 1. அரசாங்கம்,
2. டீ. ஜே. பெஷன் நிறுவகம்,
தலல்ல.

7- 125

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.